இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 11.07.2026

# எப்படி எல்லாம் பிராடு பண்ணுகிறார்கள்?

**குதிரை பேரம், கழுதை பேரம், நரி பேரம் அனைத்தையும் நடத்தி வருகிறவர்கள், அதே போன்ற பழியை மற்றவர்கள் மீது போடுவதற்காக, எப்படி எல்லாம் பிராடு தனங்களைச் செய்கிறார்கள் என்பதற்கு முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி வழக்கே சாட்சி ஆகும். தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள எந்த அளவுக்கு கீழான செயலையும் விஜய் செய்வார் என்பதற்கு இது சாட்சி.**

பேரவைத் தலைவருக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வரும் போது கொறடா உத்தரவை மீறி தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டுமாம். இப்படி ஊத்தங்கரை த.வெ.க. எம்.எல்.ஏ.வான இளையராஜாவிடம் குதிரை பேரம் நடத்தினார்களாம் திருநாவுக்கரசு. அவருடன் சேர்ந்து சிலரைக் கைது செய்துள்ளார்கள். இந்த திருநாவுக்கரசுவை பேசச் சொன்னாராம் முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி. அவரது தம்பி அசோக்குமாரையும் இத்துடன் சேர்த்துள்ளார்கள். இது பற்றி விசாரிக்க செந்தில்பாலாஜியையும் அசோக்குமாரையும் வரவழைத்து மிரட்ட நினைக்கிறது விஜய் போலீஸ்.

**பேரவைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஊத்தங்கரை இளையராஜா ஆதரித்து வாக்களித்தால் என்ன ஆகும்? இளையராஜாவுக்கு எம்.எல்.ஏ. பதவி போய்விடும். இந்த அடிப்படை அறிவு கூடவா இல்லாமல் கதை விடுவார்கள்?**

**ஒரே ஒரு இளையராஜா வாக்களித்தார் என்பதற்காக பேரவைத் தலைவர் பதவி பறி போய்விடுமா? சபாநாயகர் பதவி பறி போனால் விஜய் ஆட்சிதான் உடனே கவிழ்ந்துவிடுமா? இந்த அடிப்படை அறிவு கூடவா இல்லாமல் கதை எழுதுகிறார்கள்?**

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இன்றைய சட்டசபையில் 59 உறுப்பினர் ஆதரவுதான் இருக்கிறது. இதை வைத்து ஆட்சியைக் கவிழ்த்து விட முடியுமா? கேட்டால், 'இன்னும் பத்து எம்.எல்.ஏ.க்களிடம் பேசி இருக்கிறார்கள்' என்று கதை விடுகிறார் அரசாங்க வழக்கறிஞர். பத்து பேர் யார்? தைரியம் இருந்தால் சொல்ல வேண்டியதுதானே? அந்த பத்து பேர் முகத்தையும்தான் பார்ப்போமே? 'பண ஆசை காட்டினால் வளைக்க முடியும்' என்ற பட்டியலில் இருப்பவர்களைத்தான் பார்ப்போமே?

நட்சத்திர ஹோட்டல், ஹவாலா பணம், கார்ப்பரேட் கம்பெனி - இந்த வார்த்தைகளைச் சேர்த்துக் கொண்டால் 'கிக்' ஆக இருக்கும் என்று சேர்த்துக் கதையைச் சுற்றி இருக்கிறார்கள்.

35 கோடி ரூபாய் கொடுப்பதாக யார் சொன்னார்கள்? அது குற்றச்சாட்டில் இல்லை. 'பணம் கொடுக்கிறேன்' என்று சொன்னதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? அதுவும் இல்லை. தொலைபேசி உரையாடல்கள் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

ஜூன் 26 ஆம் தேதி இப்படிச் சொன்னதாக ஜூன் 29 ஆம் தேதி புகார் கொடுக்கிறார் இளையராஜா. இரண்டு நாட்கள் எதற்காகக் காத்திருந்தார் இளையராஜா? யாராவது 35 கோடியைக் கொண்டுவந்து இறக்குவார்கள் என்று காத்திருந்தாரா? பணம் வரவில்லை என்றதும் புகார் கொடுத்தாரா?

கைது செய்யப்பட்ட திருநாவுக்கரசும், செந்தில்பாலாஜியும் குறிப்பிட்ட நாளில் ஈரோட்டில் இருந்தார்களாம். இது ஒரு ஆதாரமாம். செந்தில்பாலாஜி ஈரோட்டில் இருந்த நாளில் த.வெ.க.காரர்கள் நிறையப் பேர் ஈரோட்டில் இருந்திருப்பார்கள். இவர்களையும் சதியில் சேர்த்துவிடலாமா? என்ன லாஜிக்?

**'த.வெ.க. அரசைக் கவிழ்க்கத் திட்டமிட்டார் திருநாவுக்கரசு' என்று செய்தி பரப்பினார்கள். ஆனால் திருநாவுக்கரசு தனது வாக்குமூலத்தில் அப்படிச் சொல்லவில்லை. அரசுத் தரப்பும், போலீஸ் தரப்பும்தான் அப்படிச் சொன்னது. பிரச்சினை பெரிதாகி நீதிமன்றத்தில் விசாரணை வந்ததும், 'அரசைக் கவிழ்க்கத் திட்டமிட்டார்கள்' என்ற சொல்லை நீக்கிவிட்டார்கள். மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ இதனை நீதிமன்றத்தில் உடைத்து வாதிட்டார்.**

செந்தில் பாலாஜி தரப்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, "சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் நாளுக்கு இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு நாட்கள் தாமதத்திற்கு முறையான காரணங்கள் இல்லை. அந்த தொலைபேசி உரையாடலின் ஆடியோ பதிவு இல்லை. இந்த வழக்கில் செந்தில்பாலாஜியின் பெயர் முதல் தகவல் அறிக்கையில்கூட இடம் பெறவில்லை. வரவிருக்கும் கரூர் இடைத்தேர்தலில் அவர் தனது கடமைகளைச் செய்வதைத் தடுக்கும் நோக்கில், அரசியல் பழிவாங்கலுக்காகவே இந்த வழக்கில் அவரைச் சேர்க்க மாநில அரசு துடிக்கிறது என்று பல்வேறு ஊடகங்கள் எழுதி இருக்கின்றன" என்று வாதிட்டார்.

**அப்போது குறுக்கிட்ட நீதிபதி, "எஃப்.ஐ.ஆரின் படி செந்தில்பாலாஜிக்கு இதில் எந்தப் பங்கும் இருப்பதாகத் தெரியவில்லையே?" என்று அரசுத் தரப்பை நோக்கி கேள்வி எழுப்பினார். அதற்கு முறையான ஆதாரங்கள் கொண்ட வாதங்களை அரசு வழக்கறிஞரால் வைக்க முடியவில்லை.**

இருதரப்பு வாதங்களையும் விரிவாகக் கேட்ட நீதிபதி ஜி.கே. இளந்திரையன், எப்.ஐ.ஆரில் செந்தில்பாலாஜியின் நேரடித் தொடர்பு குறித்துப் போதிய ஆரம்பகட்ட ஆதாரங்கள் இல்லாததைச் சுட்டிக்காட்டி, முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி மற்றும் அவரது சகோதரர் ஆர்.வி. அசோக் குமார் ஆகிய இருவருக்கும் நிபந்தனைகளுடன் கூடிய முன்ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார்.

எந்த ஆதாரமும் இல்லாத வழக்கு என்பதால் செந்தில்பாலாஜிக்கு முன்பிணை கொடுத்துள்ளது நீதிமன்றம்.

**ஆட்சி அமைத்து இரண்டு மாதங்கள்தான் ஆகிறது. அதற்குள் போலீஸை வைத்து எவ்வளவு தகிடுதத்தங்கள் எல்லாம் செய்கிறார்கள் பாருங்கள். சட்டமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் மட்டுமல்ல; நீதிமன்றத்திலும் நாறுகிறது விஜய் அரசு.**

# அந்த நினைவுக்கு ஒரு நன்றி!

## (கலைஞர் கவிதைக் கடிதம்)



(முன்னுரை:- கழகக் குடும்பத்தின் உடன்பிறப்புகள் - பாசமிகு தம்பிமார்கள் எல்.ஜி., செஞ்சி - அவர்களைத் தொடர்ந்து தம்பிகள் மு.கண்ணப்பன், கம்பம் ராமகிருஷ்ணன், டி.கே.சுப்பு ஆகியோர் ஆயிரக் கணக்கான கழக மாமணிகளுடன் தாய்க் கழகத்திற்கு வந்து இணைந்தபோது அந்த ஐவருடனும் தனித்து உரையாடிய நேரத்தில் எழுந்த நினைவலைகளே இந்தக் கடிதம்)

### உடன்பிறப்பே,

குமரி முனைக் கடற்கரை விருந்தினர் மாளிகையில்
குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தேனாம்;
அந்த நள்ளிரவில் அப்போது நமது தம்பிமார்கள் –
ஆற்காட்டார் – துரைமுருகன் – இன்னொருவர்; இப்போது நான்,
பெயர் சொல்ல விரும்பாதவர்; இவர்கள் மூவரும்
மாடித் தாழ்வாரத்தில் – தேடக் கிடைக்காத திரவியமாய்த்
திராவிடர்க்குக் கிடைத்த தி.மு. கழகத்தின் வளர்ச்சி,
வலிமை, வற்றாத பாச உணர்வு – இவை பற்றியும் – அதன்
வருங்காலம் பற்றியும் வானம் வெளுக்கும் வரையில்
உரையாடினார்களாம்.
அப்போது, அந்தத் தம்பி – நான் பேர் சொல்லாப் பெருமகன்;
என் தம்பிகள் ஆற்காட்டாரையும், துரைமுருகனையும் பார்த்து;
"சரி, கலைஞருக்கு அடுத்து கழகத்தின் தலைவர் –
ஸ்டாலின்தானா?" என வெகுண்டெழுந்து
கேட்டாராம் –
"எப்படி அதைச் சொல்கிறாய்?" என அந்தத் தம்பியர்
கேட்டவுடன்; "பேராசிரியர் அவர்கள், கூட்டங்கள் – மாநாடுகளில்
கூறுகின்ற புகழுரைகள் ஸ்டாலினைப் பற்றி
மழையாகப் பொழிகிறதே"
என ஆயாசப்பட்டாராம்; அந்த அருமைத் தம்பி!
உடன்; ஆற்காட்டாரும், துரைமுருகனும்; "அன்பழகனார்
அப்படிப் பேசுவதில் என்ன தவறு? அந்தப் பிள்ளையாண்டான்
செய்துள்ள தியாகம் – இளைஞர் அணியை வளர்க்கும்
இணையற்ற ஆற்றல் – இவற்றைப் பேராசிரியர் பாராட்டுவதில்
என்ன குறை – யாரையும் எடை போட்டுத்தான் –
பேராசிரியர் ஏற்றுக் கொள்வார் –
கலைஞரையே உறைத்துப் பார்த்து உண்மைத்திறனை உணர்ந்த
பிறகுதான் ஒப்புக் கொண்டார்; தனக்கே தலைவராக!
எனவே இப்போது கலைஞருக்குப் பிறகு ஸ்டாலின்தான்
என்ற பேச்சுக்கு என்ன அவசரம்? நீர் ஏன் நெருப்பைத்
தொட்டது போல் துடிக்க வேண்டும்? கலைஞரே இப்போது
உம்மைத்தானே "போர்வாள்" என்று புகழ்கிறார் – போற்றுகிறார் –
மாநிலங்களவை உறுப்பினர் பதவியை உமக்கு வழங்கியது போல
வேறு யாருக்கு இப்படித் தொடர்ந்து வழங்கியிருக்கிறார்;
கவலைப்படாமல் இருந்திடுக! கலைஞர் அவர்கள்; தனக்குப் பிறகு
உம்மைத்தான் தலைவராக்குவார் இயக்கத்திற்கு" என்று நம்பிக்கை
தெரிவித்து அந்த நள்ளிரவிலும் நமது பேர் சொல்ல விரும்பாத
பெருமைமிகு தம்பியின் முகத்தில் ஒளி பிறக்கச்
செய்திருக்கிறார்கள்.
புன்னகை தவழ்ந்த அந்தத் தம்பியின் முகத்தில்
புதியதோர் சிந்தனை – அது ஒரு கேள்வியாகவும் மாறியது!

"ஏன் துரைமுருகன்; நான் கலைஞருக்குப் பிறகு
தலைவனாவேன் என்கிறீர்களே? ஒரு வேளை நமது
கலைஞர், பெரியார் போல – ராஜாஜி போல – தொண்ணூறு
வயதுக்கு மேல் வாழ்ந்து விட்டால்; நான் தலைவனாவதற்கு
எத்தனை வருடம் காத்திருப்பது?"

இதைக் கேள்வியாகக் கருதாமல்; மற்ற இரு தம்பியரும்
தேள் பிலிற்றும் விஷமாக எண்ணிக் கலங்கி –
இருவரும் இரகசியமாக சத்தியம் செய்து கொண்டார்களாம் –
இந்தச் செய்தியை இருவரும் தலைவரிடம்
எப்போதும் சொல்வதில்லையென்று !

ஆனால் –

துரைமுருகன் ரகசியத்தைக் காப்பாற்றுவதில் இரும்புப் பெட்டி!
ஆற்காட்டாரோ – அசல்; கண்ணாடிப் பேழை –
எனினும்
ஆண்டுகள் சில பல கடந்த பிறகே;
அன்றைய குமரி முனையில் குமுறிய எரிமலையின்
குட்டை மனப் பேராசையின் வெளிப்பாட்டைக் கூறினர் எனக்கு!
குறளின் அமுத மொழியாம்;

**"செப்பின் புணர்ச்சிபோற் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி"**

(செப்பு எனப்படும் சிமிழில் அதன் மூடி பொருந்தியிருப்பது போல வெளித் தோற்றத்துக்கு மட்டுமே தெரியும். அவ்வாறே உட்பகை உள்ளவர்கள் உளமாரப் பொருந்தியிருக்க மாட்டார்கள்)

உடன்பிறப்பே,
"குறளோவியம்" நூல் தொகுப்பில் நான்
குறிப்பிடாமல் விட்டுப் போன இந்தக் குறட்பா;
இந்த நேரத்தில் நினைவுக்கு வந்ததே;
அந்த நினைவுக்கு ஒரு நன்றி!

அன்புள்ள,
**மு.க.**
(29.3.2009)



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9-7-2026) தேனி மாவட்டம், கம்பம் பகுதியைச் சேர்ந்த இளம் எழுத்தாளர் ஹாலித் ராஜா சமகால அரசியல் கவிதைகளை உள்ளடக்கமாகக் கொண்ட 'முகம்பார்' கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். உடன் கழகச் சுற்றுச்சூழல் அணியின் மாநிலத் துணைச் செயலாளர் டாக்டர்.சபி சுலைமான், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் நா.இளையராஜா, பிரபு கஜேந்திரன், ஜி.பி.ராஜா ஆகியோர் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டனர்.